# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
## மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்
## திருவாரூர்.

அறன் ஈனும் இன்பமும ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

ஏண்ணியர் எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின்.

என்ற வள்ளுவரின் வாக்கினை செயல்படுத்தும் வகையில்,

வேலைநாடும் படித்த இளைஞர்கள், தங்களின் தகுதி, திறமைகேற்ற வேலையினை பெறுவதற்கு தேவையான ஆலோசனை, உதவி பயிற்சி **பதிவு,பரிந்துரைத்தல்** போன்ற **பணிகள்** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் **மேற்கொள்ள**படுகின்றன.

பதிவு:

படித்த இளைஞர்கள், தாங்கள் வசிக்கும் மாவட்டத்தின் வேலைவாய்ப்பு அலுவலகத்தில், தங்களது கல்வித்தகுதி, பயிற்சி சான்றிதழ், தொழில் திறன், முன் அனுபவம் போன்றவற்றை பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவின் போது, குடும்ப அடையாள அட்டை, அசல் கல்வி சான்றிதழ் போன்ற ஆவணங்கள் அவசியம்.

**http://tnvelaivaaippu.gov.in** என்ற இணையதளத்தில் **On-line** மூலமாகவும் பதிவுசெய்து கொள்ளலாம்.

## ***On line Registration – Steps & Tips:-***

1. **Click  for new user ID registration.**
2. **Click I agree – in terms and conditions.**
3. **Fill in the mandatory field in the candidate registration form.**
4. **Click Save.**
5. **Click Ok.**
6. **Click ok in do you want to continue.**
7. **Fill in the Personal detail form.**
8. **Click Next.**
9. **Fill in the contact detail form.**

10. In the Name of the office (Select Prof & Exe office Chennai for PG Reg. )
11. Fill in Qualification Details.
12. Click Add.
13. Click next if you have Tech or Skill Qualifications.
14. Fill in Tech and Skill Details.
15. Click Add.
16. Click Save.
17. Click Continue in view profile.
18. Click Ok in Do you went to print ID card.
19. Note down the Reg. No.
20. Take the print out of the ID card.
21.

**For on-line Registration, please have the following documents in hand, before login:-**

1. Ration Card.
2. Community certificate.
3. General / Technical and skill Qualification Certification.

You need not come to the Employment Office for verification of your registration.

You need not submit or send your copy of the documents to the Employment Exchange.

For Registration of Experience and Priority you have to come to the Employment Office.

## *முன்னுரிமை பதிவு:*

வேலைவாய்ப்பில் சில குறிப்பிட்ட பிரிவினருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

1. ஆதரவற்ற விதவைகள்:-
   கோட்டாட்சியர் வழங்கும் சான்றிதழ் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

2. கலப்பு திருமண தம்பதியினர்:-
   (I)தம்பதியினர் இருவரில் ஒருவர் தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
   (II)திருமணத்தை பதிவு செய்திருக்க வேண்டும்.
   (III)கணவன்/மனைவி இருவருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

3. முன்னாள்/இன்னாள் இராணுவத்தை சார்ந்தோர்:-
   (I)இராணுவத்தில் பணிபுரிவோரின் மனைவி அல்லது குழந்தைகளில் ஒருவருக்கு மட்டும் அவர்கள் பணிபுரியும் பிரிவு தலைவரின் பரிந்துரையின் பேரில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
   (II)முன்னாள் இராணுவத்தினரின் மனைவி அல்லது குழந்தைகளில் ஒருவருக்கு உதவி இயக்குநர் முன்னாள் படைவீரர் நலன் அவர்களால் வழங்கப்படும் முன்னுரிமை சான்றின் அடிப்படையில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது.

4. சுதந்திர போராட்ட.ஃ.மொழிபோர் தியாகிகள்:-
   மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்ட சுதந்திரப்போராட்ட மற்றும் மொழிப்போர் தியாகிகள் மகன் அல்லது மகள் ஒருவருக்கு வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்படும் சான்றிதழின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

5. அரசால் நிலம் கையகப்படுத்தப்பட்டோர் வாரிசுகள்:
   பொது நோக்கத்திற்காக அரசால் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு, நில உரிமையாளரின் விருப்பத்திற்கு மாறாக அரசால் நிலம் கையகப்படுத்தப்பட்டிருந்தால், நில உரிமையாளர், அவரது மனைவி அல்லது மகன்.ஃ.மகள் இவர்களில் ஒருவருக்கு மட்டும் வட்டாட்சியர் (நிலம் கையகப்படுத்துதல்) அல்லது கோட்டாட்சியர் அவர்களால் வழங்கப்படும் சான்றிதழின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

6. தாய்,தந்தை இழந்தோர்:-
   சிறுவயதில், தாய், தந்தையினை இழந்து, உறவினர் பாதுகாப்பிலோ அல்லது கருணை இல்லத்திலோ தங்கி படித்த மாணவர்கள் மாவட்ட சமூக நல அலுவலர், வட்டாட்சியர் அல்லது கருணை இல்ல காப்பாளர் வழங்கும் சான்றிதழின் அடிப்படையில் முன்னுரிமை பதிவு மேற்கொள்ளப்படுகிறது.

7. மாற்றுத்திறனாளிகள்:-

பார்வை குறையுடையவர்கள், செவிப்புலம் இழந்தவர்கள், உறுப்பு நலன் குறைந்தோர் போன்றவர்கள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு அலுவலர் அல்லது அரவு மருத்துவரால் வழங்கப்படும் மருத்துவ சான்றிதழின் அடிப்படையில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது.

முன்னுரிமை தொடர்பான பதிவுகளின் போது சான்றிதழ்களின் மெய்தன்மை ஐயமின்றி உறுதி செய்யப்பட்ட பின்னரே பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது.

## முதுகலை பதிவு:-

முதுகலை மற்றும் தொழில்கல்வி படிப்பினை சென்னையில் உள்ள தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தனியாக பதிவு செய்யப்படுகிறது. **On-line** ல் **http://tnvelaivaaippu.gov.in** என்ற இணையதளத்திலும் பதிவு மேற்கொள்ளலாம்.

## பயிற்சி சான்றிதழ்:-

தொழில் திறன் பயிற்சி, தொழில் பழகுநர் பயிற்சி போன்ற பயிற்சி சான்றிதழ்களையும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொள்ளலாம்.

## பணி நீக்கம்:-

வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு, தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டோர் பணிக்காலியிடம் இன்மையால் பணி நீக்கம் செய்யப்பட்டோர், பணிநீக்க சான்றுடன் 90 நாட்களுக்குள் அதிகபட்சம் 1.1/2 ஆண்டுகளுக்குள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரில் தொடர்பு கொண்டு பழைய பதிவு மூப்புடன் மறுபதிவு செய்து கொள்ளலாம்.

## தடையின்மைசான்று:-

வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பணிநியமனம் செய்யப்பட்டவர்கள், கூடுதல் கல்வித்தகுதி உடையர்களாக இருந்தால், வேலையளிப்போரிடம் தடையின்றி சான்று பெற்று கூடுதல் கல்வித்தகுதியினை மீளவும் பழைய பதிவுமூப்புடன் பதிவு செய்து கொள்ளலாம்.

## பதிவு மூப்பு:-

கல்வித்தகுதியினை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த தேதி பதிவு மூப்பு எனப்படுகிறது.

## புதுப்பித்தல்:-

வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும். தவிர்க்க இயலாத காரணங்களால் உரிய காலத்தில் புகுப்பிக்க தவறியவர்கள், அடுத்துவரும் இரு மாதங்களில் தங்களது பதிவினை புதுப்பித்துக்கொள்ளலாம்.

சலுகை காலத்திலும் புதுப்பிக்க தவறியவர்கள் 18 மாத சிறப்புச்சலுகையினை பயன்படுத்தி தமது பதிவினை புதுப்பித்துக்கொள்ளலாம்.

பதிவுதாரர்கள் தமது பதிவினை நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ http://tnvelaivaaippu.gov.in என்ற இணையதளத்தில் Online மூலம் புதுப்பித்துக்கொள்ளலாம்.

மாற்றுத்திறனாளிகள் தங்களது பதிவினை புதுப்பித்தலில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

பணியில் சேராதவர்கள்:-

வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்ட பதிவுதாரர்கள் மருத்துவ காரணங்களால் பணியில் சேர இயலவில்லை எனில் அதற்கான சான்றுடன், தங்களது அடுத்த புதுப்பித்தல் காலத்திற்குள் விண்ணப்பித்து தங்களது பதிவினை புதுப்பித்துக்கொள்ளலாம்.

முகவரி மாற்றம்:-

வேலைவாய்ப்பு அலுவலக பதிவுதாரர்கள் அதே மாவட்டத்திற்குள் தங்களது முகவரியில் மாறுதல் இருப்பின், குடும்ப அடையாள அட்டை நகலுடன் விண்ணப்பித்து மாறுதல் செய்து கொள்ளலாம்.

பதிவு மாற்றம்:-

பதிவுதாரர்கள் தங்களது பதிவினை இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்திற்கும், மாவட்டத்திற்கும் அதே பதிவுமூப்புடன் மாறுதல் செய்து கொள்ளலாம்.

பதிவுமாற்றம் பதிவுசெய்து ஒரு ஆண்டு முடிவுற்ற பின்பே அனுமதிக்கப்படுகிறது.

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றுகள் :-

1. வட்டாட்சியரால் வழங்கப்பட்ட குடும்ப குடிபெயர்ச்சி சான்று
2. வட்டாட்சியர் அளவில் வழங்கப்பட்ட நிரந்தர இருப்பிடச்சான்று
3. குடும்ப அடையாள அட்டை
4. வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை.

அனைத்து ஆவணங்களும் மூன்று நகல்களில் அலுவலரால் அத்தாட்சி செய்யப்பட்டிருக்க வேண்டும். குடிப்பெயர்ச்சி சான்றும், இருப்பிடச்சான்றும் மெய்தன்மை உறுதி செய்யப்பட்ட உடன் Onlineல் மாறுதல் செய்யப்படுகிறது.

பரிந்துரைத்தல்:-

மத்திய, மாநில அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள், நகராட்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் தெரிவிக்கும் பணிக்காலியிடங்களுக்கு,

முன்னுரிமை, இனவாரி ஒதுக்கீடு, கல்வித்தகுதி, வயதுவரம்பு, பதிவுமூப்பு போன்றவற்றின் அடிப்படையில் 1:5 என்ற விகிதத்தில் பரிந்துரை

பரிந்துரை விபரங்கள் நாளிதழ்களிலும், மாவட்டத்தின் தேசிய தகவல்மைய இணையதளத்திலும்1 thiruvarur.nic.in வெளியிடப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் முன்னுரிமை பணியிடங்களுக்கும் முன்னுரிமை அற்ற பணியிடங்களுக்கும் 1:1 என்ற விகிதத்தில் பரிந்துரை செய்யப்படுகின்றனர்.

வயது வரம்பு:-

முற்பட்ட வகுப்பினர் (OC) -- 30 வயது
முற்பட்ட/பிற்பட்ட வகுப்பு (BC/MBC) -- 32 வயது
தாழ்த்தப்பட்ட/பட்டியல் இனத்தவர் (SC/ST) -- 35 வயது

வயது சலுகை:-

ஆதரவற்ற விதவை - 5 ஆண்டுகள்.
மாற்றுத்திறனாளிகள் - 10 ஆண்டுகள்.

**Rule 12 (d):**

பத்தாம் வகுப்புக்கு மேல் படித்துள்ள **BC/MBC/ST/SC** பிரிவினை சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பணிநியமனம் பெறுவதற்கு உச்ச வயது வரம்பு கிடையாது.

புதுப்பித்தல் வயது சலுகை:-

எட்டாம் வகுப்பு வரை மட்டும் படித்துள்ள பதிவுதாரர்களுக்கு பொதுக்கல்வி பணியிடங்களுக்கு ஒவ்வொரு புதுப்பித்தலுக்கும் 1 ஆண்டு வயது சலுகை அதிகபட்சம் 5 ஆண்டுகள் வயது சலுகை வழங்கப்படுகிறது.

பயிற்சி காலம்:-

தொழில் பழகுநர் பயிற்சி காலம் (1 அல்லது 2 ஆண்டுகள்) வயது சலுகை வழங்கப்படுகிறது.

பணிக்காலம்:-

வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு காலமுறை ஊதியத்தில் பணிநியமனம் செய்யப்பட்டு, பணிநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு அவர்கள் அரசு நிறுவனங்களில் பணியாற்றிய காலம் வயது சலுகை வழங்கப்படுகிறது.

பணிநியமனம்:-

வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் அல்லது போட்டித்தேர்வுகளின் மூலம் காலமுறை ஊதியத்தில் பணிநியமனம் செய்யப்பட்டவர்கள் பதிவுகள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பதிவு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

புணிநியமனம் பெற்றவர்கள் தங்களது கூடுதல் கல்வித்தகுதியினை வேலையளிப்போரிடம் தடையின்மை சான்று பெற்று மீளவும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளலாம்.

தினக்கூலி, தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் தனியார்துறைகளில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பதிவு நீக்கம் செய்யப்படாமல் தொடர்ந்து உயிர்பதிவேட்டில் (**live register**) பராமரிக்கப்பட்டு பரிந்துரைக்க பரிசீலிக்கப்படும்.

விண்ணப்பம் பரிந்துரைத்தல்:-

வேலைவாய்ப்பு செய்தி வார இதழில் (**Employment News**) வெளியிடப்படும் மத்திய வேலைவாய்ப்பு அலுவலக பணிக்காலியிடங்கள் (**Central Employment Exchange**) பெறப்படும் விண்ணப்பங்கள் வேலையளிப்போருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

## இளைஞர் வேலைவாய்ப்புப் பணி:-

உயர்கல்வி வேலைவாய்ப்பு, போட்டித்தேர்வுகள், நுழைவுத்தேர்வுகள், கல்வி உதவித்தொகை, கல்விகடன், சுயதொழில் வாய்ப்புகள், பயிற்சிகள், கடன் வசதி திட்டங்கள் போன்ற தகவல்கள தொகுத்து பராமரிக்கப்படுகிறது.

வேலைநாடும் இளைஞர்களுக்கு இத்தகவல் தொகுப்பின் உதவியுடன் உரிய ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

ஆண்டுதோறும் பள்ளி/கல்லூரிகளில் மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் வழிக்காட்டுதல் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நடத்தப்படுகிறது.

## தன்னார்வ பயிலும் வட்டம்:-

வேலைநாடும் இளைஞர்கள், **UPSC, TNPSC, RRB, SSC, URB** போன்ற ஆள்சேர்ப்பு வாரியங்கள் நடத்தும் போட்டித்தேர்வுகளின் மூலம் பணிவாய்ப்பு பெற உதவிடும் வகையில் தமிழகத்தில் மட்டும் செயல்படுத்தப்படும் திட்டம் தன்னார்வ பயிலும் வட்டமாகும்.

## நூலக வசதி:-

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும், அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் போட்டித்தேர்வுகளுக்கான ஆதார நூல்கள், பாடத்திட்டம், தேர்வுத்திட்டம், வினாவங்கி அடங்கிய நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

## இலவச பயிற்சி வகுப்புகள்:-

போட்டித்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு தேர்வுக்கு முன்பு 1 மாத காலம் விடுமுறை நாட்களில் அனுபவமிக்க ஆசிரியர்களை கொண்டு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது.

## தன்னம்பிக்கை வளர்த்தல்:-

அரசுத்துறை உயர் அலுவலர்கள், வல்லுநர்கள், தொழில் அதிபர்கள், ஆசிரியர்களின் மூலமாக அவ்வப்போது தன்னம்பிக்கை வளர்த்தல் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

## நேருக்கு நேர்:-

அண்மை காலங்களில் போட்டித்தேர்வில் வெற்றிப்பெற்று பணிவாய்ப்பு பெற்ற அலுவலர்களுடன் போட்டித்தேர்வுக்கு தயாராகும் இளைஞர்களை நேருக்கு நேர் சந்திக்கும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

## மாதிரி தேர்வுகள்:-

இலவச பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு மாதிரி தேர்வுகளும், குழுவிவாதமும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

## வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டம்:-

பட்டப்படிப்பு, மேநிலைகல்வி, பத்தாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் தோல்வி கல்வித்தகுதியினை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து 5 ஆண்டுகள் முடிவுற்ற பதிவுதாரர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படுகிறது.

வயது வரம்பு:-

| | | |
|---|---|---|
| **SC** பிரிவினர் | -- | 45 வயது |
| இதர பிரிவினர் | -- | 40 வயது. |

ஆண்டு வருமானம்:-

**Rs**.50.000 ஆயிரத்துக்குள் இருக்க வேண்டும்.

இதர தகுதிகள்:-

கல்வி நிலையங்களில் மாணவராக இருத்தல் கூடாது. தனியார் துறையில் பணிபரிபவராக இருத்தல் கூடாது.

உ தவித்தொகை:-

| | | |
|---|---|---|
| பட்டப்படிப்பு | -- | **Rs.300/-** |
| மேலநிலைகல்வி | -- | **Rs.200/-** |
| **SSLC Pass** | **--** | **Rs.150/-** |
| **SSLC Fail** | **--** | **Rs.100/-.** |

நிவாரண காலம்:-

3 ஆண்டுகள்.

வழங்கும் முறை:-

3 மாதங்களுக்கு ஒருமுறை வங்கி கணக்கில் செலுத்தப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கு பதிவுசெய்து 1 ஆண்டு முடிவுற்றிருந்தால் போதுமானது. வருமான வரம்பு இல்லை. உயர்த்தப்பட்ட உதவி தொகை பத்தாண்டு காலம் வழங்கப்படுகிறது.

தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்:-

ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படுகிறது. இம்முகாமில் வேலையளிப்போரும், வேலைநாடுபவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

**District Employment Office**
**Thiruvarur.**
**deotvr@tn.gov.in**
**9655723389**
**04366-224226**

**************